# தமிழ்நாடு அரசு கேபிள் டிவி கார்ப்பரேஷன் லிமிடெட்

11/22, மாங்காடுசாமி தெரு, நுங்கம்பாக்கம், சென்னை 600 034

தொலைபேசி எண். 044–28221233, தொலைநகல். 044–28253021


TACTV

## உள்ளூர் கேபிள் ஆப்பரேட்டர்கள் (LCO), பன்முனை கேபிள் ஆப்பரேட்டர்கள் (MSO) மற்றும் தனியார் உள்ளூர் தொலைக்காட்சி உரிமையாளர்களுக்கு (PLC) முக்கிய அறிவிப்பு

| பார்வை. 26.09.2013 அன்று நடைபெற்ற 34வது இயக்குநர் குழு கூட்டத்தின் 9–வது தீர்மானம். |
|---|

குறைந்த கட்டணத்தில் நிறைவான கேபிள் டிவி சேவையை பொதுமக்களுக்கு வழங்கும் உயரிய நோக்கத்துடன் தமிழகம் முழுவதும் கேபிள் டிவி சேவையினை மாதம் ரூ.70/– என்ற கட்டணத்தில் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் வழங்கும் என **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்கள் அறிவித்தார்கள். அதன்படி, தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், கேபிள் டிவி சேவையை அளித்து வருகிறது.

தற்பொழுது உள்ளூர் கேபிள் ஆப்பரேட்டர்கள் (LCO), பன்முனை கேபிள் ஆப்பரேட்டர்கள் (MSO) மற்றும் தனியார் உள்ளூர் தொலைக்காட்சி உரிமையாளர்கள் (PLC) மாதாந்திர கட்டணத்தொகையினை சலான் (Challan) முறையின்படி தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்திற்கு இந்தியன் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மற்றும் கரூர் வைசியா வங்கி மூலம் செலுத்தி வருகின்றனர்.

**மாதாந்திர கட்டணத்தொகை ரூ.ஐந்தாயிரத்திற்கு (ரூ.5000/–) மேல் செலுத்த வேண்டிய உள்ளூர் கேபிள் ஆப்பரேட்டர்கள் (LCO), பன்முனை கேபிள் ஆப்பரேட்டர்கள் (MSO) மற்றும் தனியார் உள்ளூர் தொலைக்காட்சி உரிமையாளர்கள் (PLC), 01.01.2014 முதல் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்திற்கு நேரடியாக ஆன்லைன் (Net Banking) முறையில் www.tactv.in என்ற இணையதளத்தின் மூலம் மட்டுமே செலுத்த முடியும்.**

ஆன்லைன் மூலம் மாதாந்திர கட்டணத்தொகையினை செலுத்துவதற்கான செயல்முறை விளக்கத்தினையும், வங்கிகளின் விவரங்களையும் இந்நிறுவனத்தின் இணையதளத்தில் (www.tactv.in) அறிந்து கொள்ளலாம்.

**மேலாண்மை இயக்குநர்**